DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No.4/2021
****

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW2 |
| Name | : | வேலுச்சாமி |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 10.07.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இந்த வழக்கின் 3 ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பு 2 ஆம் சாட்சியாவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன்.

**பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை**

நான் சிவில் சப்ளை கார்பரேஷனில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் கரிவலம்வந்தநல்லூரில் குடியிருந்து வருகிறேன். வாதி எனக்கு மைத்துனர் ஆவார். நான் மேற்படி பணியில் 2015 வரை பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். குமரேசன் நேரில் வந்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் காட்டமுடியும். அவர் இறந்து போனார். நான் தாக்க்ல செய்த முதல் விசாரணை சங்கதிகள் குறித்து எனக்கு தெரியும். முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றாலும், குமரேசன் என்பவர் எனக்கு யாரென்று தெரியாது என்றாலும் வாதி எனது மைத்துனர் என்பதால் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

உண்மையிலேயே நான் இருந்து கடன் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த சங்கதியை பிராதில் கூறியிருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் வேலை பார்த்த ரேசன் கடையில் கடைக்காரர் சரக்கு வாங்குவார். நான் சட்டத்திற்கு புறம்பான நபர் என்பதால் ரேசன் பொருட்களை கடைக்காரர் வாங்கியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் ஒரு விருப்புறுதி சாட்சியம் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஒரு தலைபட்சமானது என்றாலும் சரியல்ல.

**ம.வி இல்லை.**